# அனுபவ வார்த்தை

கடுங்கோடையின் தீவிரமான வெப்பத்தையும், அன்று மீனாட்சி சிறிதும் உணரவில்லை. அவள் உள்ளம் குளிர்ந்திருந்தது. வெளியே வீசிய அனல் காற்று அவளைச் சிறிதும் பாதிக்கவில்லை.... மப்பும் மந்தாரமும் கவிந்து, வானம் இருண்டு, பூமி குளிர்ந்து, காற்று சுகமாக வீசும்பொழுது மயிலுக்கு உத்ஸாகம் எழுமே, அதுபோலத்தான் தோன்றியது மீனாவுக்கும். உத்ஸாகத்துடன் இங்குமங்கும் ஓடியாடி அலைந்துகொண்டு, வீட்டு அலுவல்களைக் கவனித்துக் கொண்டு வந்தாள். பாதங்கள் தரையில் பாவாததுபோலவும். ஆகாயத்திலே மிதப்பதுபோலவும் ஒரு அலாதியான இன்ப உணர்ச்சியைத்தான் நுகர்ந்து கொண்டிருந்தாள் அவள்.

அவள் மனமகிழ்வுக்கு உவமை கூறலாமா?.... பூர்ணிமை நிலவின் வரவைக் கண்டு பொங்கும் கடலைப்போல அன்று. 'ரேஷன் கடையிலே அரிசி, சர்க்கரை வாங்கும் நாள் வந்துவிட்டது!' என்று உள்ளம் பூரிக்கும் குடித்தனப் பெண்ணின் மகிழ்ச்சியையும் தோற்கடிப்பதாகத்தான் இருந்தது மீனாவின் மகிழ்ச்சி!

அவள் கணவன் ஆபீஸிலிருந்து வீடு திரும்பும் நேரம் நெருங்க நெருங்க, அவளுடைய பரபரப்பும் பெருகலாயிற்று. வாசலுக்கும் உள்ளுக்கும் நடையாக நடந்து கொண்டு மனதில் பொங்கிக்கொண்டு வந்த இன்ப வெள்ளத்திற்கு ஈடு செய்ய முயன்று வந்தாள் அவள், பாவம்! பொங்கும் பாலை அடுப்பிலிருந்து இறக்காமல், தண்ணீர் தெளித்துக் தெளித்துத் தணித்துக் கொண்டிருந்தால், பொங்குவது அடங்கியே விடுமா?

அவள் எதிர்பார்த்த அந்த நேரம் வந்தது. பொங்கும் இன்பத்தை மனதிலிருந்து இறக்கிக் கணவனுடன் பகிர்ந்துகொள்ளக் காத்திருந்த அவள், அவன் வந்ததும் வராததுமாய் படபடப்புடன், "இதோ, பாருங்கள், அம்மா கடிதம் போட்டிருக்கிறாள்! தம்பி சீனுவுக்குப் பூணூலாம், அக்கா பெண்ணுக்கு வளைகாப்பு சீமந்தம் நடக்கப்போகிறதாம்! நம்மைக் கட்டாயம் வரவேண்டுமென்று எழுதியிருக்கிறாள்!" என்று சொன்னாள், பேராவலுடன் அவனைப் பார்த்தவாறே.

பாவம், அவளுடைய உத்ஸாகமெல்லாம் நொடியில் ஒடுங்கும்படி செய்த பதிலைத்தான் அவன் அளித்தான்.

"ஓஹோ, சரி! ஆனால் அவர்கள் வரச் சொல்லிவிட்டார்கள் என்று நீ கண்மூடித்தனமாய் மூட்டை முடிச்சு கட்டிவிடாதே! இப்போதே சொல்லிவிட்டேன்!" என்றான் கணபதி, கண்டிப்புத் தொனிக்கும் குரலில்.

பொங்கி வழியும் பாலை அடுப்பிலிருந்து இறக்கும் முயற்சியிலே அடுப்பிலே பாலைக் கொட்டிவிட்டு பாலும் போய் அடுப்பும் அணைந்து புகைவதைக்கண்டு திகைக்கும் 'பாகசாஸ்திர'ப் புத்தகப்படிப்பாளியைப்போல மீனாவும் திகைத்து நின்றாள்.

கணவனைக் கொஞ்சும் தோரணையில் ஒரு பார்வை பார்த்துக் கொண்டே, "ஏன்? போக வேண்டாமா நாம்?" என்ற ஒரு கேள்வியைப் பொறுக்க முடியாத வேதனையுடன் கேட்டாள்.

"போக வேண்டாம் என்றுதான் மூட்டை கட்டாதே என்றேன்! அப்படிப் போகத்தான் வேண்டுமென்றால், பெட்டி படுக்கை மூட்டையை நீ கட்டு. உன் வயிற்றிலிருக்கும் குழந்தை விரைவில் பரலோகம் போகிறதென்று நானும் இந்த க்ஷணமே மூட்டை கட்டி வைத்துவிடுகிறேன்!" என்றான் கணபதி அழுத்தந்திருத்தமாய், கால் பூட்சைக் கழட்டிக் கொண்டே.

"ஹோ!" என்றாள் மீனா, எதையோ கண்டு கொண்டவள்போல. ஒரு நொடியில் அவளுக்கு கணவனின் மனது விளங்கியது. இத்தனை நேரமும் நினைவுக்கு வராத ஒரு உண்மை புலனாகியது.

இப்பொழுது மீனாவின் கருவிலே தோன்றியிருக்கும் சிசு, இரண்டாவது. முதல் தடவையாக அவள் கருவுற்றிருந்தது முதல் இந்த இரண்டாவது கரு தோன்றியபின் கொஞ்சநாள் வரை, நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள் எல்லாம், இத்தனை நேரமும் திரையிட்டு மறைக்கப்பட்டுக் கிடந்தன. அன்னையின் அழைப்புப் பத்திரிகைக்கு அத்தகைய வலிமையும் மகத்துவமும் இருந்தது; மறந்தது அவள் குற்றமா?

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான், மீனா முதன் முதலாகக் கருத்தரித்தாள். கல்யாணமாகி மூன்று வருடம் கணவனுடன் இல்லறம் நடத்தியும், அதுவரைக் குழந்தைப்பேறு பெறாத அவள் உள்ளத்தில் குழந்தை ஒன்று வேண்டுமென்ற ஏக்கம் இருந்தது. அவனுக்கும் ஆசையிருந்தது நிறைய. 'பெண்' என்பதால் அவள் மட்டும் உணர்ந்த குறையாக இருக்கவில்லை அந்தக் குறை. 'தம்பதிகள்' என்பதற்கு ஏற்ப இருவரையும் தான் அந்தக் குறை பிணைத்து இருந்தது.

நல்ல வேளை, கடவுள் அதிகம் சோதனை செய்யாமல், அவள் வயிற்றில் குழந்தை தோன்ற அருளினார்.

'தலைச்சன்' பிரசவமாதலால், கல்கத்தா மகாணத்திலிருந்து சென்னை மாகாணத்திலிருக்கும் பிறந்தகம் வந்தாள் மீனா. மிகுந்த உத்ஸாகத்துடன் வந்தாள். கணபதியும் மலர்ந்த முகத்துடன் அவளை வழியனுப்பினான். ஆனால் திரும்பி வரும்பொழுது அந்த உத்ஸாகம் அவளுக்கும் இல்லை, மனைவியை வரவேற்ற அவனுக்கும் இல்லை. ஏனெனில், குழந்தையை ஏந்திய கைகளுடனும், கிலுகிலுப்பைகள் நிறைந்த தொட்டிலுடனும் வரவேண்டிய மீனா, வெறுங்கையுடன் வந்தாள்.

குழந்தை பாவம், பிறக்க வேண்டிய சமயத்திலேதான் பிறந்தது. ஆனால் அது இறக்க வேண்டிய சமயமும் சீக்கிரமாக வந்துவிட்டதே! பிறந்து வாழ்ந்த ஏழு நாட்களுள், அந்த மகவு, அந்த கிராமத்தில் கையாளப்பட்ட நாட்டு வைத்திய மருந்துகள், ஆங்கில வைத்திய மருந்துகள் எல்லாவற்றையும் ருசி பார்த்துவிட்டு, அவற்றை விரும்பாமல், ஏற்காமல், நோயும் நொடியும், பிணியும் மூப்பும் மல்கிய இந்தப் பூவுலகில் நிற்காமல், அமர வாழ்வு எய்திவிட்டது.

அதன் பிரிவைக் கேள்விப்பட்டது முதல் கணபதி சினத்துடன், "கிராமத்தில் சரியான வைத்தியம் ஏது? குழந்தைக்குச் சரியாக வைத்தியம் செய்யாமல் கொன்றுவிட்டார்கள் எல்லோரும் சேர்ந்து!" என்று பொருமினான். மனைவி பிறந்தகத்திலிருந்து மீண்ட பின்பு அவளிடமும் அப்படியே சொன்னான்.

கணவன் பிறந்த ஊரையும், பிறந்தகத்தையும் குறை கூறுவதை அவள் விரும்பாமல், வருந்தினாலும், கணவனின் மனதிலே ஏற்பட்ட ஏமாற்றமும் வருத்தமும்தான் அவனை அவ்வாறு பேசத் தூண்டுகின்றன என்று எண்ணி அவள் சமாதானம் செய்து கொண்டாள். கணவனின் சொற்களைச் சொல்லம்புகளாக அவள் நினைக்கவில்லை.

பிறகு அவள் இரண்டாம் தடவையாக கருவுற்றிருப்பது தெரிந்ததுமே அவன் "மீனா இந்தத் தடவை உன்னை ஊருக்கு அனுப்பாமல், இங்கேயே ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடப்போகிறேன், தெரியுமா?" என்று சொல்லியிருக்கிறான்.

"அப்படியே ஆகட்டும்!" என்று மீனா பதில் கூறியிருக்கிறாள். தன் கணவன் கூறியிருந்ததையும், தான் அளித்த பதிலையும் ஏற்கெனவே இது விஷயங்களை பெற்றோர்க்குத் தான் எழுதியிருந்ததையும் மறந்தேயிருந்தாள் மீனா. இந்தப் பகல் முழுதும், 'பிறந்தகத்திலே விசேஷம் நடக்கிறது, அதையொட்டி அழைப்பு வந்துவிட்டது' என்ற நினைப்பில், 'போகிறோம் பிறந்தகம்!' என்னும் எண்ணம்தான் முன்வந்து நின்று கொண்டது; மற்ற விஷயங்கள் எல்லாம் மறைந்து கொண்டுவிட்டன.

தட்டி எழுப்பப்பட்டவளைப் போல "ஓ!" என்றாள் மீனா. கணவனின் மனசு தெள்ளத் தெரிந்தும் ஆசையால் உந்தப்பட்ட அவளுடைய உள்ளம், பகல் முழுதும் கட்டிவிட்ட இன்பக்கோட்டை குலைவதை ஒப்பவில்லை.

"ஓ, அதற்காகச் சொல்லுகிறீர்களா? அப்படியானால் நான் ஒரு யோசனை சொல்கிறேன்! என்னை மாத்திரம் யார் துணையிலாவது அனுப்பிவிடாமல், நீங்களே வாருங்கள் கூட. இருவருமாகப் போய் பூணூல், சீமந்தம் எல்லாம் பார்த்துவிட்டு, இருவருமாகவே திரும்பி விடலாம்! கட்டாயம் என்னைக் கூட்டிக்கொண்டு போய்த்தான் ஆகணும் என்று நீங்கள் கண்டித்துச் சொல்லுங்கள். அங்கே நானும் போகத்தான் போவேன் என்று சொன்னால், கட்டாயம் அனுப்பிவிடுவார்கள். வரும்பொழுது நாம் அம்மாவை கூட்டிக்கொண்டு வந்துவிடலாம்; நான் அங்கே இருக்கும்படி நேராது; இப்படிச் செய்யக்கூடாதா?" என்றாள் மீனா.

'இந்த யோசனைக்காவது கணவன் ஆமோதிக்கமாட்டானா?' என்ற கவலை தோய்ந்த முகத்தினளாய் அவன் முகத்தைப் பார்த்தாள்.

"அதெல்லாம் நடக்காத காரியம், மீனு! உன்னை அனுப்பும்படி உன் அம்மா ஏற்கெனவே எழுதினதற்கு, 'முடியாது' என்று எழுதின பிறகுதான், வற்புறுத்தி எழுதுவதை நிறுத்தினாள். இப்போது நீ போனால், பூணூலானதும் அனுப்பிவிடுவார்களோ? மாட்டார்கள். 'பதினைந்து நாள் இரு', 'ஒரு மாதம் இருந்துவிட்டுப்போ', என்பார்கள். உனக்கும் சபலம் தட்டும். 'இருக்கலாம், இருந்துவிட்டுப் போகலாம்' என்பாய். அப்புறம் எட்டு மாதங்கள் வரை நீ வருவதேது! உன்னை விட்டுவிட்டுப் போகும்படி நாலு பேர் சொன்னால் நானும் லேசில் தட்ட முடியாது வார்த்தையை! தட்டினால் 'முரட்டு மாப்பிள்ளை என்பார்கள். இந்தத் தொல்லை எதுவுமில்லாமல் தப்ப, போகாமலே இருப்பது தான் நல்லது. இந்தக் குழந்தையையும் குழியில் போட்டுவிட்டு வர, துணிந்து நான் உன்னை அனுப்பமாட்டேன், கூட்டிக் கொண்டு போகவும் மாட்டேன்! வீண் ஆசையை விட்டுவிடு!" என்று சொல்லிவிட்டு, விடுவிடென்று அப்பால் போய்விட்டான் கணபதி.

மீனாவுக்கு நெஞ்சு பனிபோல உறைந்துவிட்டது; அனல்போலவும் உள்ளம் எரிந்தது. சொல்லம்புகள் தாங்காமல் அழுகை பார்த்துக்கொண்டு வந்தது. ஆனால் மிதமீறிய வருத்தமும், ஏமாற்றமும் தொண்டையை அமுக்கிவிட்டன. மேலும் அன்பின் சக்தியிலே நம்பிக்கை மிகுந்தவள் அவள். அதனால் துக்கத்தையும் வெறுப்பையும் கட்டுப்படுத்தி கணவன் மனத்தை நோகச் செய்யாமல், களைத்து வீடுமீண்ட புருஷனுக்கு இன்முகமாகக் காட்சியளிப்பதே நன்மை பயக்கும் என்று எண்ணி, உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு அவள் சமையறைக்குள் புகுந்தாள்.

கை, கால் கழுவிக்கொண்டு வரச்சென்ற கணபதி திரும்ப நாழியாவதைக் கண்ட மீனா, யோசனைகளில் மீண்டும் புகுந்து கொள்ளும்படியாயிற்று. மனசு பொல்லாததாயிற்றே! அங்கே எதிரில் குமுட்டியிலிருந்த நெருப்புப் போலவும், குமுட்டிமேலிருந்த குண்டானில் சாதம் கொதித்துக்கொண்டிருந்ததற்கு ஒப்பாகவும் மாறியது அவள் உள்ளம்.

"அப்பப்பா, என்ன கண்டிப்பு, கறார்! என்ன இரக்கமற்ற பேச்சு! என் வார்த்தையில் நம்பிக்கை கொஞ்சமும் இல்லை! போய் வந்துவிடலாம் என்றதற்கு, எனக்குச் சபலம் தட்டுமாம், அங்கே இருந்துவிடுவேனாம்! அப்படியிருந்துவிட்டால்தான் என்ன மோசம்! என் அப்பா, அம்மா என்ன செய்வார்கள், குழந்தை சாகணும் என்று கடவுள் விதித்திருந்தால்? போகிற உசிரை எங்கிருந்தாலும் கட்டிப் பிடிக்க முடியாது என்பதை அறியாமல் பேசுகிறாரே! போனால் போகிறது என்றால் அந்த அசட்டு எண்ணத்தில் இவ்வளவு பற்றா? ஏதோ, 'விசேஷங்களும்' நடப்பதால் தானே, இத்தனை நாளும் போகணுமென்று சொல்லாதவள் சொல்கிறேன்! இது தெரியவில்லையே! போய் வந்துவிடலாம் என்று சொன்னாலும் நம்பிக்கை இல்லை; அப்படி அங்கேயே இருக்க நேர்ந்தாலும், விதியை வெல்ல முடியுமா என்கிற யோசனையும் இல்லை! முரட்டுப்பிடிவாதம் அசாத்தியம்!" என்று அவள் மனம் வெதும்பியது.

ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம், பெண்மையின் மென்மையும் முன் வந்து நின்றது. அடுப்பிலே சாதம் பதமாகிக்கொண்டு வந்தது போலவே, அவள் மனதும் பதமாகியது.

'பாவம், அவரைக் குற்றங் கூறுவதும் சரியல்லவே! குழந்தை வேணுமென்கிற ஆசை அவரையே குழந்தையாக்கிவிடுகிறது. இந்தப் பிடிவாதம் பிடிக்கிறார்! ஆவலாக எதிர்பார்த்த அந்தக் குழந்தை போனதும், ஏமாற்றமும் வருத்தமும் உண்டாகவே, நாகரீகத்திலேயே வளர்ந்து பழகிவிட்ட அவருக்குக் கிராமத்தின் மேலும். அங்குள்ள வைத்திய முறைகள் மீதும், கோபம் இருப்பது சகஜம்தானே. அவர்மேல் என்ன தவறு?' என்று எண்ணமிடலானாள் மீனா.

கணபதி சாய்வு நாற்காலியில் அமர்ந்துவிட்டதைக் கண்டு சிற்றுண்டி காப்பியுடன் சென்று அவற்றை அவன் முன் வைத்தாள்.

சலனமற்றுக் கனிந்திருந்த அவள் முகத்தை ஒரு கடைக்கண் பார்வை மூலம் கண்டான் கணபதி. நிமிர்ந்து உட்கார்ந்து, "ஊருக்குப் போகணும் என்று ஆசையாயிருக்கிறதா, மீனு?" என்று வினவினான். அந்தக் கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.

"ஆசையில்லாமல் போகுமா? ஆனானப்பட்ட தாக்ஷாயணியே ஆசைப்பட்டாளே, விரோதம் பாராட்டிய தந்தை செய்யும் வைபவத்திற்குப் போகணுமென்று! அழைப்பு வராத அந்த விசேஷம் பிறந்தகத்தில் நடக்கிறதென்று தெரிந்தபோது, அவளுக்கே ஆசை அடங்கவில்லையே! அப்புறம் நான் எந்த மூலை?" என்று சொன்னாள் மீனா, குனிந்த தலை நிமிராமல்.

"என்ன!" என்றான் கணபதி திடுக்கிட்டு. சடாரென அவனை ஒருக்கணம் நிமிர்ந்து நோக்கிவிட்டு மீனா, அவன் முகம் காட்டிய மாறுதலைக் கண்டு, "ஆனால், அவளைப்போல நான் பிடிவாதமாக போய்விடுவேன் என்று நினைத்துவிடாதீர்கள்! உங்களுக்கு இஷ்டம் இல்லாதபோது போகமாட்டேன். அந்த தாக்ஷாயணியே கடைசியில் நொந்துகொண்டது போல - நானும் நொந்துகொள்ளும்படியாக ஏதாவது நடந்துவிட்டால், இந்தத் தடவையும் ஏதாவது நடந்துவிட்டால்.... அப்புறம் நீங்களும் ருத்திரமூர்த்தியாகி, 'பார்த்தாயா அப்பொழுதே சொன்னேனே!' என்பீர்கள்! நான் போகவில்லை! " என்றாள்.

"நிச்சயம் செய்துவிட்டாயா? சரி! அதுதான் நல்லது!" என்று கூறி சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டான் கணபதி. சமையலறைக்குத் திரும்பிய மீனாவுக்கு, துக்கத்தை அடக்கும் சக்தி அப்போதுதான் இருக்கவில்லை. போட்டிருந்த அணையை மீறி அழுகை பீறிட்டது. விசித்து விசித்து அழுதுகொண்டே மனதிற்கு ஆறுதல் தேடிக்கொண்டாள். அந்த ஆறுதலே அவளுக்குப் போதும் என்ற எண்ணத்தினால்தான் போலும், அவள் இருந்த பக்கங்கூட கணபதி எட்டிப் பார்க்கவில்லை. என்ன இருந்தாலும் பெண் பெண்தான், ஆண் ஆண்தான்.

அழுகைக்குப் பின் மீனாவின் மனதில் ஒரு அமைதி நிலவினாலும் கணவனுடன் முகங்கொடுத்துப் பேசமுடியவில்லை அவளுக்கு. ஓரிரண்டு அவசியமான வார்த்தைகளுடன் இரவுச் சாப்பாடு முடிந்தது. காரியங்களை முடித்துக் கொண்டாள் மீனா.

வீட்டில் நிலவிய நிசப்தத்திற்கு நேர்மாறாக, அமைதியின்மை அவர்கள் மனதை வாட்டிவிட்டது. இந்த அசாதாரணமான வேற்றுமையை அவளும் விரும்பவில்லை, அவனும் விரும்பவில்லை. ஓரோர் நிமிஷமும் ஓரோர் ஜாமம் போலத் தோன்றியது இருவருக்கும். இதற்கு முடிவு வேண்டுமென்று இருவரும் உள்ளூர ஏங்கினார்கள்.

கடைசியில், மின்சார தீப ஒளியில் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்க்கத் துணிவு தராவிட்டாலும், மங்கிய விடி விளக்கின் இன்ப ஒளி அந்தத் துணிவை தந்துவிட்டது. ஆண் மகனான கணபதி முதலில் துணிந்துவிட்டான். மீனாவுடன் பேச்சுக் கொடுத்தான்.

"மீனு! உனக்குக் கோபம் தானே என் மேலே?" என்று வினவினான் பரிவுடன்.

அந்த நிமிஷமே, மீனாவின் மனதிலே இருந்த கோபம், வருத்தம் யாவும் மறைந்தன. சுமை இறங்கியது.

"இல்லையே! கோபமெதற்கு?" என்றாள்.

"கோபம்தான், எனக்குத் தெரியும்! இல்லாவிட்டால் என்னோடு இத்தனை நேரம் பேசாமல் இருந்திருப்பாயா?"

"ஐயோ, கோபமில்லை!.... என்னமோ வருத்தமாயிருந்தது அவ்வளவுதான்!.... நீங்கள் அவ்வளவு சொல்லும்பொழுது...."

"நான் எதற்கு இவ்வளவு பிடிவாதமாயிருக்கிறேன் உனக்குத் தெரியாதா மீனு! நம் ஆசை நிறைவேறணுமென்றுதானே உன்னை இந்தத் தடவை ஆஸ்பத்திரியில் சேர்க்கணுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்? நீ ஊருக்குப்போனால், பிரசவத்திற்கு இங்கு திரும்புவது மட்டும் நடவாது.... மீனு..... இல்லாவிட்டால் எனக்குத் தெரியாதா உனக்கு எத்தனை ஆசை இருக்குமென்று? . . .

"அதான் உங்கள் எண்ணத்திற்கு மாறாகச் செய்ய வேண்டாம், ஊருக்குப்போக வேண்டாம் என்றேனே அப்போதே! ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம்! குழந்தை பிழைக்கணுமென்று விதியிருந்தால் காட்டிலும் பிழைக்கும். சாகணுமென்று விதியானால் கோட்டையிலும் சாகும். இதில் நம் செயல் என்ன இருக்கிறது என்று தோன்றுகிறது எனக்கு!"

"அப்படியானால், இதோ பார் மீனு! என் ஆத்ம திருப்திக்காகவாவது நீ இங்கிருந்து தானாகணும். பூணூலுக்குப் போய்விட்டுத் திரும்பிவிடுவது என்பது நடக்காத காரியம். அந்தக் குழந்தைதான் ஏழாம் நாளே போய்விட்டது. அதன் முகத்தைக் கூட பார்க்க முடியவில்லை நான். புண்ணியாவசனத்துக்குப் புறப்படச் சாமான்கள் எடுத்து வைக்கும் போதே சாவுத் தந்தி வந்துவிட்டது! இந்தக் குழந்தை சாகிறதாக இருந்தாலும் இருக்கட்டும், இங்கேயே பிறந்தால் அதன் முகத்தையாவது பார்ப்பேன்!"

கணபதியின் இந்த உருக்கமான பேச்சு மீனாவை உருக்காமல் என் செய்யும்?

"எதற்கு இந்தக் குழந்தையைப் பற்றி இப்படியெல்லாம் நினைக்கணும்! நான்தான் 'போக வேண்டாம்' என்று சொல்கிறேனே? இன்னும் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா என் பேச்சிலே!" என்றாள் மீனா பரிவுடன்.

"சரி மீனு! ஆனால் நீ மனப்பூர்வமாக நான் சொல்வதை ஏற்கணும்! உன் மனதிலே குறை எதுவும் இருக்கக்கூடாது. அதுவும் முக்கியம்தானே? உன் அம்மாவைப் பூணூலானதும் வரச் சொல்லிக் கடிதம் போட்டுவிடு. நானும் நாலுநாளில் எழுதுகிறேன்..... என்ன? ..... வீணாகக் குறைப்பட்டுக் கொள்ளாதே. எனக்கும் வருத்தம் உண்டாகும்!" என்றான் கணபதி.

மீனா மனம் தேறி தன் பிறந்தகத்தின் ஆசையை அடியோடு மறந்தாள். கணவன் கருத்தை ஏற்றுக்கொண்டாள்.

மறுநாள் அம்மாவுக்குக் கடிதம் எழுதிப்போட்டுவிட்டாள். தனக்கு உடம்பு பலவீனமாயிருப்பதால் தூரதேசப் பயணம் உடம்புக்கு ஆகாது என்றும், அம்மாதான் பிரசவ சமயத்திற்கு தன்னிடம் வரணுமென்றும் கண்டிப்பு தொனிக்க எழுதிவிட்டாள்.

ஆனால் பொல்லாத மனது மட்டும் அடிக்கடி அவளைப் பாடுபடுத்தியது. "ஆகா, ஊருக்குப் போனால் தம்பி பூணூலை மட்டுமா பார்க்கலாம்? இன்னும் என்னென்ன விசேஷங்கள் நடக்குமோ? பட்டு பிரசவத்திற்கு வருவாள். அவளுக்கு இதுதான் தலைச்சன்! சிநேகிதி விசாலத்தின் தங்கைக்குக் கல்யாணம் நடக்கும்! விசாலம் வருவாள், அவளையும் பார்க்கலாம், கல்யாணத்தையும் பார்க்கலாம்! இன்னும் சித்தி, அத்தை எல்லோரையும் பார்க்கலாம்! பார்த்து எத்தனை நாளாச்சு!" என்றெல்லாம் அவ்வப்பொழுது எண்ணமிடலானாள் மீனா.

ஆனால் உடனுக்குடனேயே, "சீ, என்ன சபலம். அவர் எவ்வளவு சொல்லியும் எனக்குப் புத்தியில்லையே! 'குறைப்பட்டுக் கொள்ளாதே!' என்று எத்தனை தடவை சொன்னார்! 'சபலம் தட்டும்' என்று சொன்னதற்கு ரோஷம் பிறந்ததே எனக்கு? ஆனால் சபலம் தானே மனசைக் கெடுக்கிறது? சே, ஊரைப்பற்றி எண்ணத்தை ஒழிக்கவேண்டும்!" என்று உறுதி கூறிக்கொள்வாள்.

நாளடைவில் முயற்சிகளில் வெற்றியடைந்தாள் மீனா. பூணூல் நடப்பதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நாள் வந்தது. அன்று கணபதி மீனாவிடம் வந்து, "மீனு, அங்கே ஊரில் பூணூல் நடந்து கொண்டிருக்கும்! போகவில்லையே என்று இருக்கிறதா?" என்றான் பட்சமுடனே.

"பூணூல் கல்யாணத்தைப் பார்க்கணுமென்று நான் அவ்வளவு ஆசைப்படவில்லையே! ஏதோ போனால், எல்லோரையும் பார்த்துவிட்டு வரலாமே என்ற எண்ணம் தான். கல்யாணத்தைப் பார்ப்பதிலேதான் ஸ்வாரஸ்யம். இப்போது எனக்குப் 'போகவில்லையே' என்ற எண்ணம் இல்லவேயில்லை!" என்று சொன்னாள் மீனா.

கணபதி சந்தோஷத்துடன், "அப்படியானால், சரி மீனு! குறைப்பட்டுக்கொள்ளாமல் இப்படியே மனசுதேறியிரு! குழந்தையும் கையுமாகவே எல்லா இடங்களுக்கும் நாம் போய் வருவோம்!' என்றான், அவள் தோள்களைத் தட்டிக்கொண்டே.

"ஓ, பேஷாக!" என்று, வருத்தம் சிறிதும் இராத குரலில் பதில் அளித்து, கணவனின் உள்ளங் குளிர வைத்தாள் மீனா.

இரண்டு மாதங்கள் சென்றன. மீனாவின் தாயார் வந்துவிட்டாள். பெண்ணுக்கு ஒத்தாசை செய்வதிலே முனைந்தாள்.

எல்லோரும் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது. 'ஜனானா' ஆஸ்பத்திரியிலே, ஒரு 'ஸ்பெஷல்' அறையிலே, மீனா ஒரு அழகிய ஆண் குழந்தையைப் பெற்றாள்.

குழந்தை பிறந்த தினத்தன்று, கணபதி அதை ஆவலுடன் பார்க்க வந்தபொழுது, மீனா "இதோ பாருங்கள்! அந்தக் குழந்தையின் முகத்தைப் பார்க்கவில்லையென்று குறைப்பட்டுக் கொண்டிருந்தீர்களே, இதைப் பாருங்கள், குறை தீரும்! அதன் அச்சுத்தான் இதுவும்! உடம்புப் பருமன், தலைமயிர் தலை, கண், மூக்கு எல்லாம் அப்படியே இருக்கிறது!" என்றாள் பலவீனமான குரலில்.

"அப்படியா? . . . அப்பாடி!" என்றான் கணபதி. குழந்தையைப் பார்த்துக்கொண்டே.

"இனிமேல் அதுதானே உங்களை அப்பா என்று கூப்பிடணும்! நீங்கள் எதற்கு அப்பா, அம்மா என்கிறீர்கள்?" என்று வேடிக்கை செய்தாள் மீனா.

இதற்குள் மீனாவின் தாயார், "அடி அம்மா, ரொம்பப் பேசாதே! உடம்புக்கு ஆகாது!" என்று கூறவே, அங்கிருந்து நகர்ந்தான் கணபதி.

கணபதி குழந்தையைப் பற்றி சிந்தித்துக்கொண்டே வருகையில், எதிரே வந்த தலைமை நர்ஸ், "அழகான குழந்தை, உங்கள் குழந்தை!" என்று 'கீச்சு'க்குரலில் ஆங்கிலத்தில் கூறி, அவன் சந்தோஷத்துக்கு சிகரம் வைத்தாள். கணபதி உடல் பூரித்து, உள்ளம் பூரித்துப் பூரிபோல உப்பிப் போனான்.

ஆம், பூரிபோலத்தான் உப்பிப்போனான் அவன். ஏனெனில் ஆறி அமுங்கும் பூரிபோலதான் அவன் உள்ளமும் மறுநாள் மாறிவிட்டது.

மறுநாள் அவன் ஆஸ்பத்திரி சென்று மனைவியையும், மகனையும் பார்த்தான் அப்போதுதான் மீனா சொன்னாள் ஒரு விஷயம்.

"பாருங்கள், எனக்கென்னமோ பயமாக இருக்கிறது இன்று! நேற்று குழந்தை அழுதது, கண் திறந்து பார்த்தது, இன்று ஒன்றையும் காணோம்! படுத்தபடியே இருக்கிறது! அந்தக் குழந்தைதான் பிறந்தது முதலே அழவில்லை, கண் திறக்கவில்லை; அப்புறம் நிறம் மாறி மாறிக் கறுத்துப் போய் போயே போய்விட்டது. இது அப்படியில்லாமல் அழுகிறது, பார்க்கிறது என்று நேற்று சந்தோஷப்பட்டேன். ஆனால் இன்றைக்கு இது இருக்கிற தினுசைப் பார்த்தால்.... இதுவும் ஏதாவது மோசம் செய்துவிடுமோ-"

திகிலடைந்துபோய் குறுக்கிட்டான் கணபதி.

"மீனா, மீனா, 'சொல்லாதே! அப்படியொன்றும் நடக்காது. ஆஸ்பத்திரி டாக்டர்கள் என்ன கோளாறு என்று பார்த்து சிகிச்சை செய்துவிடுவார்கள். கண்டபடி உளறாதே! இதோ நானும் போய் டாக்டரிடம் எல்லாம் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு கணபதி 'விர்'ரென்று ஆஸ்பத்திரி பெரிய டாக்டரிடம் சென்றான். இந்தக் குழந்தையைப்பற்றி மீனா பயப்படுவதையும், அதற்குமுன் குழந்தை இருந்த மாதிரியையும் எடுத்துச் சொல்லித் தன் கவலையை அவளிடம் கொட்டி வெளிப்படுத்தினான்.

"ஓ எஸ்! என்னால் முடிந்தவரை பார்ப்பேன், கவலைப்படாதீர்கள்". என்று தைரியமாக மொழிந்தாள் முதியவளான அந்த வெள்ளைக்காரி டாக்டர்.

தைரியம் ஒரு புறம், அதைரியம் இன்னொரு பக்கம் ஆட்கொண்டுவிட்டன அவன் மனதை. வேதனையுடனே வீடு மீண்டான்.

என்ன ஆகுமோ?' என்ற கேள்விப்புழு அவன் உள்ளத்தில் துளை செய்து அரித்துக்கொண்டிருந்தது.

அந்த உள்ளத்தில் புழுவை அழிக்கும் விஷமாகவும், அவன் உள்ளத்தில் அதே சமயம் அமுதமாகவும் பாய வேண்டிய செய்தி கிடைப்பது கஷ்டம்தானே? எளிதில் ஏற்படக்கூடியதா?

கணபதிக்கு ஆபீஸிலும் வேலை ஓடவில்லை; அதற்காக லீவும் போடவுமில்லை. வீட்டிலிருந்தாலும், ஆஸ்பத்திரியிலிருந்தாலும் மனது நிலை கொள்ளாது, தவிக்கத்தான் தவிக்கும்ம் என்பதை உணர்ந்து ஆபீஸ் போவதை அனாவசியமாக நிறுத்தவில்லை. ஆஸ்பத்திரிக்குக் காலையிலும், மாலையிலும் போய் விசாரித்து வந்தான்.

இரண்டு நாட்கள்..... நாலு வேளைகள்..... கொஞ்சம் தென்பு கொடுக்கும் பதில் பெற்றான் அவன். நர்ஸ்கள், "குழந்தை நிறம் மாறிக் கொண்டுதான் இருக்கிறது," என்று சொன்னார்கள். ஆனால் அடுத்தாற்போலவே, "கவனிக்கிறோம் , கவலை வேண்டாம்!" என்றும் தைரியமாகச் சொன்னார்கள்.

"அவர்கள் அதைரியமாகச் சொல்லவில்லை. பிழைத்துவிடலாம்!" என்று கொஞ்சம் தைரியத்துடனும், ஆனால் அதிகம் கவலையுடனும்தான் அந்த இரண்டு நாட்களும் வீடு திரும்பினான் அவன்.

குழந்தை பிறந்த நான்காம் நாள் காலையும் அதே பதில்தான் நர்சுகளிடமிருந்து வந்தது. ஆனால் "பயப்படாதீர்கள்" என்று வழக்கம்போல வந்த அந்தப் பதிலை, வழக்கம்போல ஏற்கவில்லை கணபதியின் நெஞ்சம். "எனக்கு நம்பிக்கையில்லை. நான் ஆசையை விட்டுவிட்டேன்!" என்று வழக்கம்போல வந்த மீனாவின் வார்த்தைகளில்தான் உண்மையிருப்பது போல வழக்கத்திற்கு மாறாக எண்ணமிட்டது அது. கவலை மிகுந்தவனாய், வேதனையால் கொழுவி எடுக்கப்பட்டு வந்தான்; பிறகு மனம் சோர, உடல் தளர ஆபீசும் போய்விட்டு வந்தான்.

அன்று மாலை ஆஸ்பத்திரிக்குப் புறப்படும்பொழுது அவனுடைய இடது கண் பட்டென்று ஒரு துடி துடித்தது. கஷ்ட தசையில் கடவுள் நினைவு வருவதுபோல மனது சிரமப்படும்பொழுது இது போன்ற சகுனங்களில் நம்பிக்கை தோன்றுவதும் இயற்கைதானே? அதனால் கணபதியும், "ஐயோ, குழந்தை போய்விடுமோ? நான் அதைக் கையால் தொட்டுக்கூடப் பார்க்கவில்லையே, பதினோரு நாளாவது பிழைக்காதா கடவுளே! . . . " என்று பீதியும் படபடப்பும் அடைந்தான் முதலில்.

"ஏன், பதினோரு நாள் எதற்கு? இப்போதே போய் அதை எடுத்துக்கொள்கிறேன்.... ஆஸ்பத்திரியில் இதற்கெல்லாம் என்ன தடை? . . . அப்பா . . . என்ன மிருதுவாக இருக்கும் குழந்தையின் உடம்பு! அந்தச் சின்னஞ்சிறிய உருவத்திற்குத்தான் என்ன அழகு!" என்று எண்ணமிட்டுக் கொண்டே கடைசியில் ஆஸ்பத்திரியை அடைந்தான் கணபதி.

மீனா இருந்த அறையை நெருங்கும்போது ஏனோ அவனுக்கு மனது குழம்பியது. தன் நெஞ்சிலே 'ஜீவன் இல்லாமல் சூன்யமாயிருப்பதுபோல ஒரு பயங்கர உணர்ச்சி அவனைக் கவ்விக்கொண்டது.

திகிலுடனே அறையை அணுகி "மீனு, குழந்தை எப்படியிருக்கு?" என்று வினவினான். அறைக்குள் எட்டிப்பார்க்கும் முன்பே கேள்வி பறந்தது.

பதில் மீனாவிடமிருந்து வரவில்லை. அவள் தாயிடமிருந்து வந்தது.

"அது போயிடுத்து, மாப்பிள்ளை . . . "

"என்ன?"

"குழந்தை போயிடுத்து மாப்பிள்ளை! மத்தியானம் இரண்டரை மணி இருக்கும் போனபோது . . " என்றாள் அவள் தொண்டை கரகரக்க.

"என்ன, செத்துப்போய்விட்டதா? . . .எங்கே காட்டுங்கள் . . . எங்கே அது? . . . தவறு ஒன்றும் நடக்கவில்லையே!"

"பாருங்கள், இதோ! போய் மூன்று மணி, நாலுமணி நேரம் ஆகப்போகிறதே! நீங்கள் வரணுமென்றுதான்....."

மீனாவின் விம்மல் ஒலி கேட்கவே, அவள் படுத்திருந்த பக்கம் திரும்பினான் கணபதி. நாத்தழு தழுக்க "மீனு!" என்று அழைத்தான்.

"ஏன்," என்று கேட்கும் பாவனையில் ஒரு வினாடி கணவனை மீனா ஏறிட்டுப் பார்த்தாள்.... அவளுடைய விழிகள் என்ன பேசினவோ, "ஐயோ என்னைக் கூப்பிடாதீர்கள்!" என்று சொல்லிவிட்டு முகத்தைக் குப்புறக் கவிழ்த்துத் தலையணையில் புதைத்துத் தேம்பத் தொடங்கினாள் பேதை.

அவனுக்கும் அழுகை வந்தது; வாய்விட்டுக் கதறலாம் போலக் கூடத் தோன்றியது. ஆனால் கண்ணீர் மட்டும் தான் சுரந்தது அப்போது.

உயிருடன் இருக்கும் குழந்தையை எடுக்க ஆசைப்பட்டு வந்த அவன், பஞ்சு போன்று மென்மையான உடலை ஏந்த விரும்பி வந்த கணபதி, கட்டை போல நீட்டிக் கிடந்த உயிரற்ற குழந்தையைத் தாங்கிக்கொண்டு வெளி வந்தான், கொஞ்ச நேரத்திற்கெல்லாம்.

மறுநாள் மீனா ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பினாள். இன்ப நினைவுகளுக்கு இருப்பிடமாக இருக்க வேண்டிய அந்த ஆஸ்பத்திரி அறை துன்ப நினைவுகளுக்கு இருக்கையாக மாறிவிட்டதால், அந்த அறை பயங்கரமாகத் தோற்றமளித்தது அவளுக்கு. அதனால் மறுநாளே வீடு திரும்ப விரும்பினாள், அனுமதியும் பெற்றுவிட்டாள்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளிவரும்போது டாக்டர் துரைசாணி கணபதியை அணுகி, "மிஸ்டர் கணபதி! உங்கள் மனைவி அடுத்த தடவை கருவுற்றதும், இஞ்செஷன்கள் சில செய்து கொண்டால் குழந்தை நிச்சயம் பிழைக்கும். அவளுடைய உடல் ரத்தத்தில் ஒரு கோளாறு. அது கருவில் தோன்றும் குழந்தை மூலம்தான் தெரியும்; வேறு எவ்விதத்திலும் புலனாகாது. போன குழந்தைக்கு இப்படித்தான் ஆச்சு என்று சொன்னீர்கள்.... இந்தக் குழந்தை உண்டானதும், இன்ஜெக்ஷன்கள் செய்து கொண்டிருந்தால், இது பிழைத்திருக்கலாம்.... அதற்கு நாமென்ன செய்ய முடியும்? . . இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கலாம், அவ்வளவுதான்! அடுத்தக்குழந்தை நிச்சயம் பிழைக்கும், வருத்தப்படாதீர்கள்!" என்று சொல்லி, அவனையும் மீனாவையும் வழியனுப்பினாள்.

"உம், ஆகட்டும் டாக்டர், எச்சரிக்கையாயிருக்கிறோம்!" என்று சொல்லிவிட்டு வந்தான் கணபதி.

"ஆகட்டும் பார்த்துக்கொள்ளலாம்!" என்று வெறுப்பும் சலிப்பும் நிறைந்த மனதுடன் வந்தாள் மீனா.

ஆனால் வீடு திரும்பியதுமே அமைதி கிட்டுமா? பூமியிலே உழலாமல் விண்ணுலகு மீண்ட குழந்தைக்குத் தேவர்களும், தேவியரும் பூமாரி பொழிந்தார்களோ என்னமோ தெரியாது; ஆனால் குழந்தை பிரிந்ததால் இந்தத் தம்பதிகளின் உள்ளங்கள் மட்டும் துன்ப மழையால் நைந்து கொண்டிருந்தன. போன மகவு அறைக் குழந்தைதான் - நான்கே நாட்கள்தான் அவர்கள் கண்முன்னே இருந்தது . . . ஆனால் அவர்களுடைய பெற்ற மனம் மறக்க முடியுமா அந்த மகவை? தாயின் வயிற்றில் உருவாகிக்கொண்டு வந்த பத்துமாதங்களுள், அந்தக் குழந்தை, எத்தகைய பிருமாண்டமான ஆசைக்கோட்டையை இவர்கள் இருவர் மனதிலும் எழுப்பிவிட்டிருந்தது!

மீனாவின் தாயார், தான் வந்த காரியம் வெற்றி பெறாமல் முடிந்ததைக் கண்டு வருத்தத்துடனே கிளம்பினாள் தன் ஊருக்கு. போகும்பொழுது பெண்ணிடம், "அம்மா மீனா! அடுத்த விசை கட்டாயம் இஞ்செக்ஷன்கள் செய்துகொள்! குழந்தை பிழைக்கும்! போன தடவையே உன் உடம்பைப்பற்றி டாக்டர் சொல்லியிருந்தால் - அவரும் நன்றாக கற்றுத் தெரிந்தவராக இருந்திருந்தால் - இந்தக் குழந்தை 'தக்கி' யிருந்திருக்குமோ என்னமோ? அவ்வளவுதான் நாம் கொடுத்து வைத்தது . . . என்ன செய்யலாம்? கிராமத்து டாக்டர் குழந்தைக்கு வைத்தியம் செய்து பார்த்தாரே தவிர, உன் உடம்பிலே கோளாறு இருக்கலாமோ என்று அவருக்குச் சொல்லத் தெரியவில்லை . . . அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான், நம் துரதிஷ்டம்! இந்த விசை எச்சரிக்கையாயிரு, உடம்பை கவனித்துக்கொள்!" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டாள். அவள் வார்த்தைகளில் அங்கலாய்ப்பும் பரிவும், தாழ்மையுணர்ச்சியும் தொனிப்பது கேட்ட கணபதி, "பரவாயில்லை மாமி . . . நாமென்ன செய்ய முடியும், விதி இப்படி இருக்கும்போது? வருத்தப்படாதீர்கள்!" என்றான். 'விதியிருந்தால் காட்டிலும் பிழைக்கும், கோட்டையிலும் சாகும்,' என்று மீனா கூறியது அவன் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தனவே!

பின்னர் ஒரு நாள் கணபதி மனைவியிடம் பேச்சுவாக்கிலே, "மீனு, பட்டிக்காட்டிலாவது அந்தக் குழந்தை ஏழு நாள் பிழைத்தது? இது இங்கே நான்கு நாட்களில் போய்விட்டதே!" என்றான்.

"அதற்காக, நீங்கள் கிராமத்தைப் பழித்தது தப்பு என்று சொல்லுகிறீர்களா? இல்லவேயில்லை, நீங்கள் பழித்தது தப்பேயில்லை! அந்த டாக்டர் குழந்தையைப் பார்த்துப் பார்த்து 'இப்படி', 'அப்படி' என்றாரே தவிர, என் உடம்பிலே கோளாறு இருக்கக்கூடும் என்று ஒரு வார்த்தை சொன்னாரா? சொல்லியிருந்தால், இங்கே ஆயிரம் லேடி டாக்டர்கள் இருக்கும்போது யாரையாவது ஒரு வார்த்தைக் கேட்டிருக்க மாட்டேனா? ரத்தப் பரீட்சை செய்திருக்கலாமே, இதுவும் பிழைத்திருக்கலாமே! . . . இங்கே குழந்தை நாலு நாள் தான் இருந்தது என்றால் அதற்குப் பட்டண வாசம் என்ன செய்யும்? போன தடவைக்கு இந்த தடவை எத்தனை மடங்கு ரத்தக் கோளாறு அதிகமாகிவிட்டதோ? பார்க்கப் போனால், ஆஸ்பத்திரியானதால்தான் நாலு நாளாவது இந்தக் குழந்தை பிழைத்ததோ என்னமோ?" என்று ஆவேசத்துடன் மீனா பகர்ந்தாள்.

கணபதி சிந்தனையுடன், "இந்த நாளிலே விசித்திர விசித்திரமான நோய்கள், தினுசு தினுசான வைத்தியங்கள்! டாக்டர்கள் எப்படி சரியாக எல்லாக் கோளாறுகளையும் கண்டுபிடிக்க முடியும்? கஷ்டம்தான்! உன் உடம்பிலே என்ன கோளாறோ?" என்றான்.

"என்ன கோளாறோ? ரத்தத்திலே தான் கெடுதி என்று அந்த ஆஸ்பத்திரி டாக்டர் சொன்னாள். ஆகக்கூடி, பயங்கரமானதாகத்தான் இருக்கு!.... இல்லாவிட்டால் குழந்தையை அப்படியா பாதிக்கும்! அப்பப்பா...... குழந்தை நிறம் மாறுகிறபோதும் அழத் தவிக்கும் போதும்..... அது பட்ட கஷ்டம்.... நினைத்தாலே நடுங்குகிறது! கொட்டாப்புளி மாதிரியிருக்கிறேன். ஆனால் என் உடம்பு முழுக்க விஷம்போலிருக்கு...... என்னால் குழந்தைக்குச் சாவு!........ நானும்......" மேலே கூறமாட்டாமல் மீனா முகத்தைத் தன் இரு கைகளாலும் மூடிக்கொண்டு, பொங்கும் விசும்பலை அடக்க முயன்றாள்.

பேச்சை மாற்ற கணபதி, "மீனு, வருத்தப்படாதே! இதோபார்..... நானே இன்னும் கொஞ்ச நாளைக்கு உனக்குக் குழந்தையாக இருக்கப்போகிறேன்.... உன்னுடைய பராமரிப்பு எனக்கு

இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்கணுமென்றுதான் கடவுள் இப்படிச் செய்திருக்கிறார், தெரியுமா?" என்றான்.

மீனா கைகளை எடுத்துவிட்டுக் கணவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். 'அப்படியென்றால் என்ன அர்த்தம்?' என்று கேட்பதுபோல ஒரு கேள்விக்குறி கண்களிலும், லேசான புன்னகை இதழ்களிலும் தோன்றியது மீனாவின் முகத்தில், அவ்வாறு நோக்கும்பொழுது.

"என்ன அப்படி பார்க்கிறாய்? தெரியாதாக்கும் அர்த்தம்? குழந்தையிருந்தால் அதையே கவனிப்பாய், அதையே கொஞ்சுவாய். என்னை லட்சியம் செய்வாயா நீ! ........அதைத்தான் சொன்னேன்" என்று சொல்லி மெல்லச் சிரித்தான் கணபதி.

"அடப்பா! பயத்தைப் பாரு!..... குழந்தையிருந்தால், புருஷனைக் கவனிக்க மறந்துவிடுவாளாக்கும் ஒரு பெண்!..... அப்படி வேறு யாராவது இருப்பார்களோ, இருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அப்படி இருக்கமாட்டேன் பயப்படாதீங்கோ.... நீங்களும் ஒரு குழந்தைதான் எனக்கு...... நான் மீனா...... மீனாட்சியம்மை!,... நீங்கள் பிள்ளையார் ......... இல்லையா?" என்றாள் மீனா பதிலுக்குப் பரிகாசமாக.

இவ்வாறு என்னதான் அவர்கள் சந்தோஷத்தை நாடிப்போனாலும் அனுபவம் அளித்த ஏமாற்றமும், வருத்தமும் அறவே அகலுமா அத்தனை சீக்கிரம்?

"மீனு, ஒரு மாத ரஜாவில் தமிழ்நாடு போய் வருவோம்! பந்துக்களைப் பார்த்துவிட்டு வருவோம், கொஞ்சம் அமைதி காண்போம்! என்றான் ஒருநாள் கணபதி.

முன்பு ஒரு நாள் அவன் "குழந்தையும் கையுமாகப் போய் வருவோம்!" என்றது உண்மையாகாவிட்டாலும், முழுக்கப் பொய்க்கவில்லை.

'குழந்தையும், கையுமாக' அல்லாமல் 'வயிறும் பிள்ளையுமாக' போய் வந்தாள் மீனா. வயதிலும், அனுபவத்திலும் சிறியவனான கணபதியின் வாக்கு அரைகுறையாகப் பலித்தது! ஆனால் முதியவர்கள் கூறியது முழுக்கப் பலித்தது. குழிப்பிள்ளை மடியில் வந்து சேர்ந்தது! அந்த "அடுத்த குழந்தை" பிழைத்தது.

**********

(சுதேசமித்திரன், பிப்ரவரி 29, 1948)